Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

Official Property Record

Digitally Verified Record - Powered by Verified RealEstate™

தமிழ்நாடு அரசு
நகர் ஊரமைப்புத் துறை, சென்னை

கோப்பு எண் :2107_/2016 எல்எ1

நாள்: 19.03.2018

1)துணை இயக்குநர் (பொ),
செங்கல்பட்டு மண்டலம்,
செங்கல்பட்டு.
2)செயல் அலுவலர்,
திருக்கழுக்குன்றம் பேரூராட்சி,
காஞ்சிபுரம் மாவட்டம்.

மனைப்பிரிவு ம.வ./ந.ஊ.இ.எண் : 8/2018

மனைப் பிரிவு நிபந்தனைகள்

1) மனைகள் மற்றும் தெருக்கள் அங்கீகரிக்கப்பட்டு ம.வ./ந.ஊ.இ.எண்.8/2018 என எண்ணிடப்பட்ட வரைபடத்தின்படி எல்லைக்கற்களால் வரையறுக்கப்பட வேண்டும். மனைப்பிரிவுக்குள் வரும் தெருக்கள் அனைத்தும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 175 மற்றும் 179-ம் பிரிவுகளின்படி 300(8) பிரிவின் கீழ் ஏற்படுத்தப்பட்ட உபவிதிகளின்படி ஏற்படுத்தப்பட்டுள்ள விதிகளுக்கேற்ப சரளைக் கற்களைக் கொண்டு மனுதாரரால், நிர்வாக அதிகாரியால் (Executive Authority) நிர்ணயிக்கப்படும் மட்டத்திற்கும் அகலத்திற்கும் தார்சாலை அமைக்கப்பட்டுள்ளது.

2) அத்தோடு தேவையான பாலங்கள், சாக்கடை வடிகால், துப்புரவு வசதி, தெரு விளக்கு ஆகிய வசதிகளை நிர்வாக அதிகாரியின் கருத்திற்கொப்ப மனுதாரர் அமைத்துத் தர வேண்டும்.

3) நகர் ஊரமைப்புத் துறையால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள், சாலைகளின் அமைப்புகள், அளவுகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்பு துறையின் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.

4) அங்கீகரிக்கப்பட்ட இம்மனைப்பிரிவில் உத்தேசிக்கப்பட்டுள்ள தார் சாலைகள் மனைப்பிரிவு விண்ணப்பதாரர்/உரிமையாளரால் முறையாக அமைக்கப்பட்டு செயல் அலுவலர் திருக்கழுக்குன்றம் பேரூராட்சிக்கு உரிய படிவத்தில் பதிவு செய்து பொதுச் சாலையாக பராமரிக்க தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

5) மேற்படி சாலைகளை பொதுச் சாலையாக சர்வே காலங்களில் வரையறை செய்வதற்கான உட்பிரிவு தொகையையும் செயல் அலுவலர் அதிகாரிக்கு செலுத்துதல் வேண்டும். இதை நடைமுறைப்படுத்த மனுதாரரிடமிருந்து சாலைகளை ஒப்படைப்பு செய்வதற்கான உட்பிரிவு கட்டணத் தொகையைப் பெறும் வகையில் பத்திரத்தில் மனுதாரரின் கையொப்பம் பெற வேண்டும். உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய்த்துறை, சர்வே எண்கள் உட்பிரிவுகள் செய்து

5(அ) அதற்கான விபரங்கள் பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

Scanned by CamScanner

2) இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (Splay) அமைக்கப்பட வேண்டும்.

3) மேற்குறிப்பிட்ட இரு நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு முன்பு எந்த ஒரு மனையையும் விற்கவோ, குத்தகைக்கு விடவோ வேறு எந்த விதத்திலும் பரிமாற்றம் செய்யவோ அல்லது எந்த மனையிலும் கட்டடம் கட்டவோ கூடாது.

4) அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகளை குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். இதில் கடை, பண்டகசாலை மற்றும் குடியிருப்பு அல்லாத கட்டடம் கட்டுவதற்கு பயன்படத்துதல் கூடாது.

5) அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள தெருக்களுக்கு / வரைபடத்தில் காட்டியுள்ளவாறு கட்டட வரம்பு விடப்பட வேண்டும். மனைப்பிரிவில் அமையும் 7 மீட்டர்(23 அடி) அகல சாலைக்கு 1.50 மீட்டர் (5' அடி) 9 மீட்டர் (30அடி) அகலம் மற்றும் 12 மீட்டருக்கு (40 அடிக்கு) அகலம் வரையிலான சாலைகளுக்கு 3 மீட்டரும் (10 அடியும்), 18 மீட்டர் (60 அடி) சாலைக்கு 4.5 மீட்டரும் (15 அடியும்), 24 மீட்டர் (80 அடி) அகலம் மற்றும் அதற்கு அதற்கு மேற்பட்ட அகலம் கொண்ட சாலைகளுக்கு 6 மீட்டர் (20அடி) என்ற அளவில் கட்டட வரம்பு விடப்பட வேண்டும். ஊராட்சி கட்டட விதிகளின்படி மனையின் எல்லைக்கும் கட்டட வரம்பிற்கும் உட்பட்ட நிலப் பகுதியில் தெருவின் உயர்மட்டத்திலிருந்து 1.8 மீ (6 அடி) மாவட்ட நகராட்சிகள் கட்டட விதிகளின்படி 2.4 மீட்டர் (8அடி) உயரத்திற்கு மேற்படாத சுற்றுச்சுவர் அல்லது வேலி தவிர வேறு எந்தவித கட்டடமோ, சுவரோ கட்டுதல் கூடாது.

6) மனையின் பக்க எல்லைக்கும் கட்டிடத்திற்கும் இடையில் ஒவ்வொரு பக்கத்திலும் குறைந்தது 1.5மீ அளவுள்ள திறந்தவெளி அல்லது ஒரு பக்கம் மட்டும் குறைந்தது 3 மீட்டர் திறவெளி விடப்பட வேண்டும். 10 மீட்டர் வரை மனையின் அகலம் உடைய மனைகளுக்கு பக்கத் திறவெளி ஒரு பக்கத்திலாவது குறைந்தது 1.5 மீட்டர் விடப்பட வேண்டும்.

7) ஒவ்வொரு மனையின் பின்புற எல்லைக்கும் கட்டத்திற்கும் இடையில் மனையின் மொத்த அகலத்திற்கும் வியாபிக்கின்ற வகையில் குறைந்தது 3 மற்றும் ஊராட்சி பகுதிக்கு 2 மீட்டர் அளவுள்ள திறந்தவெளி இருத்தல் வேண்டும். இந்த பின்பக்கத் திறந்தவெளியில் கிணறு, கழிப்பறை, எழுக்குழி, மாட்டுத் தொழுவம், உந்து வண்டி நிறுத்தம் கொட்டகை போன்றவை அல்லது அவை போன்ற குடியிருப்பு அல்லாத ஆனால் அதைத் சார்ந்த கட்டடங்கள் மட்டுமே அமைக்கப்படலாம். ஆனால், கட்டடங்கள் மொத்தமாக பின்பக்க எல்லையின் நீளத்தில் மூன்றில் ஒரு பாகத்திற்கு மேற்படாமலும், மனையின் பின்பக்க நில மட்டத்திலிருந்து 3.00 மீட்டர் / 3.75 மீட்டர் உயரத்திற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

8) மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெரு மட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்.

9) கடைக்கால் (Foundation) போடத் தேவையான அளவிற்கு அதிகமாக தரையை சமன் படுத்தவோ, நிலச்சரிசை சீர் செய்யவோ, மனையிலிருந்து மண் தோண்டி பள்ளங்கள் ,குழிகள் , ஏற்படுத்தலோ கூடாது.

Scanned by CamScanner

10) 9 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லாத் தெருக்களிலும் நிழல் தரும் மரங்கள் எதிர்த்தாற்போல் அடுத்தடுத்து 9.00 மீட்டர் தூரத்திற்கு மேற்படாமல் சாலையின் எல்லையிலிருந்து 1.00 மீட்டருக்குள் அமைக்கப்பட வேண்டும்.

11) மனுதாரர் மனைப்பிரிவுத் தொடர்புடைய ஊராட்சி தலைவரிடமிருந்து ஒப்புதல் பெற்றுக் கொள்ள வேண்டும். மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டடத்திற்கும் உள்ளாட்சியிலிருந்து அனுமதி பெற வேண்டும்.

12) மனைப்பிரிவில் ஒதுக்கப்பட்ட கடைக்கான அல்லது கடைகளுக்கான மனையை வரைபடத்தில் காட்டியுள்ளது போல் உட்பிரிவு செய்யப்பட வேண்டும். மனைகளை அதற்குரிய உபயோகத்திற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

13) பூங்கா, திறவிடம் போன்றவைகளுக்காக ஒதுக்கப்பட்ட மனைகளை வட்டாட்சியர் அலுவலகத்தில் உட்பிரிவு செய்து உள்ளாட்சியிடம் உள்ளாட்சி அங்கீகாரம் வழங்கும்முன் தானமாக ஒப்படைக்க வேண்டும். இதனை உள்ளாட்சி அமைப்பு தவறாது கடைப்பிடிக்க வேண்டும். இத்தகைய நிலங்களை மனைபிரிவு ஒப்புதல் பெறும் நபரோ அல்லது வேறு நபர்களோ விற்பனை செய்ய முயற்சித்தாலோ அல்லது விற்பனை செய்தாலோ அவர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை தொடரப்படுவதோடு நிலத்தை பறிமுதல் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

14) மனையின் ஊடே குறைந்த அழுத்த/உயர் அழுத்த மின்கம்பிப் பாதை/தந்திக் கம்பிப் பாதை அமைந்தால், கம்பிப் பாதையை சாலையின் விளிம்பிற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் காண்பித்துள்ள-வாறோ மாற்றி அமைக்க வேண்டும்.

15) மனையின் சொந்தக்காரர்கள் மேற்படி நிபந்தனைக்குட்படுவதாக எழுத்து மூலமாக நிர்வாக அதிகாரி (Executive Authority) யுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். மனைப்பிரிவு நிபந்தனைகளை தொடர்புடைய சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும். மனைகள் விற்கப்படுவதும் அல்லது குத்தகைக்கு விடப்படுவதும் மேற்படி நிபந்தனைகளுக்குட்பட்டுத்தான் செய்யப்பட வேண்டும்.

16) அ) மேற்படி மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்புத் துறையால் தொழில்நுட்ப ஒப்புதல் (Technical approval) மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என்பதால், மனைப்பிரிவிற்கான இட உரிமைத் தொடர்பாக வில்லங்கம் ஏதேனும் இருப்பின் உள்ளாட்சியினரால் பரிசீலித்து முடிவு எடுக்கப்பட வேண்டும்.

ஆ) தமிழ்நாடு நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டம் 1978 நடைமுறையில் உள்ள இடத்தில் தொழிற்சாலை மனைப்பிரிவு அமைந்தால், தொழிற்சாலை மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கப்பட்ட விபரத்தினை தொடர்புடைய உச்சவரம்புச் சட்ட அதிகாரிக்குத் தெரிவித்தல் வேண்டும்.

இ) மனைப்பிரிவு இடம் 1894-ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல் சட்டப்பிரிவு 4(1)-ன்படி பிரகடனம் செய்யப்பட்டுள்ளதா? என்பது பற்றி பரிசீலனை செய்த பின்னரும் நில உச்சவரம்பு சட்டம் 1978 மற்றும் நிலச் சீர்திருத்தச் சட்டம் 1961 தொடர்பான விதிமுறைகளை நிறைவு செய்வதற்காக நிர்வாக அதிகாரி (Executive Authority) மனநிறைவு அடைந்த பின்னரே தான் மனைப்பிரிவுக்கு ஊராட்சி மன்றத்தில் ஒப்புதலளித்து அங்கீகாரம் வழங்கும்படி தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

Scanned by CamScanner

ஈ)மனைப்பிரிவுக்கு உள்ளாட்சியால் அங்கீகாரம் அளிக்கப்படும்போது அங்கீகார நிர்வாக அதிகாரியின் முன்னிலை நடவடிக்கையின் நகலினை இவ்வலுவலகத்திற்கு உடன் அனுப்ப வேண்டும். இதில் பொது திறவிடங்கள் உள்ளாட்சியிடம் ஒப்படைத்ததற்கான சான்றும் இணைக்கப்பட வேண்டும்.

உ)மேலும், மேற்படி சட்டங்களின்படி நில ஆர்ஜிதம் சம்பந்தமாக நில ஆர்ஜிதப் பட்டியல்(Land Plan Schedule) எதுவும் பரிசீலனைக்குப் பெறப்படவில்லை என்பதையும் மனுநிறைவு அடைந்த பின்னரே தான் மனைப்பிரிவுக்கு செயல் அலுவலர் ஒப்புதல் அளித்து அங்கீகாரம் வழங்கும்படி தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

17) மனுதாரர், திருக்கழுக்குன்றம் பேரூராட்சி செயல் அலுவலரிடமிருந்து மனைப்பிரிவு வரைபடத்திற்கு ஒப்புதல் பெற்றவுடன் மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற இடத்தில் அறிவிப்பு பலகை மூலம் மனைப்பிரிவு அங்கீகரித்த மன்ற தீர்மானம் எண்ணும் நாளும் மன்றத்திற்கும் மனுதாரருக்கும் ஒப்பந்தமான நாளும் எண்ணும் தெளிவாக குறிப்பிட்டு அறிவிப்பு செய்யப்பட வேண்டும்.

18) மனுதாரர் சமர்ப்பித்துள்ள நில உரிமை ஆவணங்களின்படி நில உரிமம் குறித்து பரிசீலிக்கப்படுகிறது. எனவே, உண்மையில் நில உரிமம் இல்லாத இடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்கு எந்த உரிமையும் கொண்டாட முடியாதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

19) நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப் பிரிவிற்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் இரத்து செய்யப்படும்

20) விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத் துறையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

21) ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம்/விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6'X4'' அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொது மக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.

22) EWS மனைகள் பொருளாதாரத்தால் பின்தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகள், இம்மனைகளை ஒருங்கிணைக்கவே மாற்றி அமைக்கவோ கூடாது.

<u>அங்கீகரிக்கப்பட்ட மனைப் பிரிவின் ஒதுக்கீடு விவரம்</u> :-

		பரப்பளவு
மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு	:	9.01 1/2 ஏக்கர் (36482.10 சதுர மீட்டர்)
ஒதுக்கிய மனைகள்	:	158 (EWS மனைகள் உட்பட

Scanned by CamScanner

<u>பொது ஒதுக்கீடு</u>:-

மனுதாரரால் உள்ளாட்சிக்கு தானமாக)
ஒப்படைக்கப்படைக்கப்பட்டது)

பூங்கா

பூங்கா I	2151.52 சதுர மீட்டர்
பூங்கா II	965.34 சதுர மீட்டர்
பூங்கா III	558.90 சதுர மீட்டர்

	3675.76 சதுர மீட்டர் 10.07%

உத்தேச சாலை மற்றும் மூலை முடுக்கு கட்டிட வரம்பு மூலை முடுக்குகள்

7.00 மீட்டர் அகல சாலை	1.5 மீட்டர்	
9.00 மீட்டர் அகல சாலை	3.0 மீட்டர்	1.5மீX1.5மீ
12.0 மீட்டர் அகல சாலை	3.0 மீட்டர்	3.0மீX3.0மீ

<u>ஒதுக்கீடு</u> :-

மனுதாரர் விற்பனைக்குரியது

கடை 1	146.50 சதுர மீட்டர்
கடை 2	226.30 சதுர மீட்டர்
கடை 3	114.17 சதுர மீட்டர்

	486.97 சதுர மீட்டர்

EWS மனைகளின் பரப்பு 2748.70 சதுர மீட்டர் 10.90%

மனை எண்கள் 96 முதல் 145 வரை

ஒம்/- பீலா ராஜேஷ்
நகர் ஊரமைப்பு ஆணையர்

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

23/3/18

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்.

B-ஒ
23-3-18

Scanned by CamScanner

திருக்கழுக்குன்றம் பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை – திரு ம.வெங்கடேஷ்.,

ந.க.எண்.541/2016 / அ 2

நாள்.28.12.2018

பொருள்– மனைப்பிரிவு – காஞ்சிபுரம் மாவட்டம் – திருக்கழுக்குன்றம் பேரூராட்சி – திருக்கழுக்குன்றம் பேரூராட்சி – மங்கலம் சர்வே எண்கள்.160/3C2A, 169/2, 169/3B, 169/3C, 169/4, 169/5A, 169/5B, 169/6, 169/7, 169/8, 169/9, 169/10, 169/11, 169/12, 169/13, 169/14, 169/15, 170/1, 170/2, 170/3A1, 170/3A3, 170/4A, 170/4B ஆகியவற்றில் மொத்தம் 9.01/2 ஏக்கர் பரப்பளவில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க அனுமதி வழங்குதல் – தொடர்பாக.

பார்வை–
1. இவ்வலுவலக கடித ந.க.எண்.541/2010 நாள்.26.10.2016.
2. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் செங்கல்பட்டு கடித ந.க.எண்.3171/2016/செம3 நாள்.08.05.2017.
3. இவ்வலுவலக கடித ந.க.எண்.541/2016/அ2 நாள்.24.07.2017
4. இப்பேரூராட்சி மன்ற தீர்மானம் எண்.122/2017 நாள்.23.08.2017.
5. இவ்வலுவலக கடித ந.க.எண்.541/2016/அ2 நாள்.25.09.2017
6. தானப்பத்திரம் பதிவு எண்.3599/2017 நாள்.12.10.2017.
7. இவ்வலுவலக கடித ந.க.எண்.541/2016அ2 நாள். 28.12.2017
8. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களது செயல்முறை ஆணை கடிதம் ந.க.எண்.21017/2016/எல்.ஏ1. நாள்.19.03.2018.
9. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் செங்கல்பட்டு கடித ந.க.எண்.3171/2017/செ.ம3 நாள்.04.05.2018.
10. இவ்வலுவலக கடித ந.க.எண்.541/2016/அ2 நாள்.25.05.2018 26.06.2018 மற்றும் மற்றும் 12.09.2018
11. அரசாணை எண். 79 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள். 04.05.2017.
12. திரு.வி.எம்.கண்ணப்பன் மற்றும் நான்கு நபர்கள், நெ.23.ஜெகநாதன் நகர், 2வது பிரதான சாலை, அரும்பாக்கம் அவர்களது கடிதம் நாள்.26.11.18
13. செயல் அலுவலர் அவர்களின் நேரடி ஆய்வு
14. உதவி பொறியாளர், திருக்கழுக்குன்றம் பேரூராட்சி அவர்களது சான்று.
15. இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.541/2018அ 2 நாள்.28.11.2018.
16. தொடர்புடையவைகள்.

ஆணை:–

காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் பேரூராட்சி எல்லைக்குட்பட்ட திருக்கழுக்குன்றம் வட்டம், சர்வே எண்கள்.160/3C2A, 169/2, 169/3B, 169/3C, 169/4, 169/5A, 169/5B, 169/6, 169/7, 169/8, 169/9, 169/10, 169/11, 169/12, 169/13, 169/14, 169/15, 170/1, 170/2, 170/3A1, 170/3A3, 170/4A, 170/4B ஆகியவற்றில் மொத்தம் 9.01/2 ஏக்கர் பரப்பளவில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைப்பதற்கு திரு.வி.எம்.கண்ணப்பன் மற்றும் 4 நபர்களால் அனுமதி கோரப்பட்டு, வை 8ல் காணும் நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் தொழில்நுட்ப அனுமதி எண்.ம.வ/ந.ஊ.து-இ எண்.8/2018 என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே, திருக்கழுக்குன்றம் பேரூராட்சி மன்ற தீர்மானம் எண்.122/2017 நாள்.23.08.2017ன்படியும், தங்களால் அளிக்கப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையிலும், திருக்கழுக்குன்றம் பேரூராட்சி எல்லைக்குட்பட்ட எண்கள்.160/3C2A, 169/2, 169/3B, 169/3C, 169/4, 169/5A, 169/5B, 169/6, 169/7, 169/8, 169/9, 169/10, 169/11, 169/12, 169/13, 169/14, 169/15, 170/1, 170/2, 170/3A1,

Scanned by CamScanner

170/3A3, 170/4A, 170/4B ஆகியவற்றில் மொத்தம் 9.01/2 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள 158 (நூற்று ஐம்பத்தி எட்டு) மனைகள் கொண்ட மனைப்பிரிவு கீழ்கண்டுள்ள நிபந்தனைகளுடன் அனுமதி அளித்து இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

<u>நிபந்தனைகள்</u>

1) நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களது கடித ந.க.எண்.21071/2016/எல்.ஏ1 நாள்.19.03.2018ல் இணைக்கப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளை தவறாது கடைபிடிக்கப்படவேண்டும். (நிபந்தனை வரிசை எண்.1 முதல் 22 முடிய)

2) நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், செங்கல்பட்டு அவர்களது கடித ந.க.எண்.3171/2016/செம3 நாள்.08.05.2017–ல் தெரிவிக்கப்பட்ட விபரப்படி இப்பேரூராட்சிக்கு வழங்கப்பட்ட தானப்பத்திரம் பதிவு எண்.3671/2017 நாள்.13.10.2017ல் குறிப்பிடப்பட்டுள்ள பொது இடங்கள், சாலைகள், பூங்காக்கள், விளையாடும் இடங்கள் ஆகியவற்றில் எக்காரணம் கொண்டும் ஆக்கிரமிப்பு ஏதும் செய்யக்கூடாது.

3) தாங்கள் அளிக்கப்பட்டுள்ள ஆவணங்கள் பிற்காலத்தில் தவறுதலாக அளிக்கப்பட்டது என்ற பட்சத்தில் இவ்வுத்தரவு தானாக இரத்தாகியதாகும் அதற்கு மனுதாரரே சட்டப்படி பொறுப்பாவார்.

4) இம்மனைப்பிரிவில் உள்ள மனைகளில் கட்டிடம் கட்டுவதற்கு முன்பாக இப்பேரூராட்சியில் வரைபட அனுமதி பெறப்படவேண்டும்.

5) இம்மனைப்பிரிவு இடத்தினை பிற்காலத்தில் அரசால் நில ஆர்ஜிதம் செய்யும் பட்சத்தில் மனைதாரர் அதற்கு கட்டுப்பட்டவராவார்.

6) நகர் ஊரமைப்பு துறையால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள், சாலைகளின் அமைப்புகள் அளவுகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையினை உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும நகர் ஊரமைப்பு துறையின் முன் ஒப்புதல் இன்றி செய்தல் கூடாது. அவ்வாறு செய்வதாக தெரியவந்தால் பேரூராட்சியின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் அனுமதியினை எவ்வித முன்னறிவிப்புமின்றி இரத்து செய்யப்படும்.

7) EWS மனைகள் பொருளாதாரத்தால் பின்தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகள், இம்மனைகளை ஒருங்கிணைக்கவோ மாற்றி அமைக்கவோ கூடாது என்பதையும் தெரிவிக்கப்படுகிறது.

செயல் அலுவலர்,
திருக்கழுக்குன்றம் பேரூராட்சி,
காஞ்சிபுரம் மாவட்டம்.

இணைப்பு–

1. அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் –1.
2. மனைப்பிரிவு நிபந்தனைகள்–1, 2

பெறுநர்–

திரு.வி.எம்.கண்ணப்பன்,
மற்றும் நான்கு நபர்கள்,
23. 2வது பிரதான சாலை,
ஜெகநாதன் நகர்,
அரும்பாக்கம், சென்னை– 106.

Scanned by CamScanner



our services doesn't just end there

Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.

empowering your real estate decisions with smart tools



Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your
real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate